பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4

29 04 2024 **6.30 PM**

## மாநில செய்திகள்

## தலைப்புச் செய்திகள்

- தமிழகத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையங்கள் தீவிரமாக கண்காணிக்கப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.
- நாட்டை புதிய உயரத்திற்கு கொண்டு செல்வதில் உறுதியுடன் உள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.
- வேளாண் கடன்களை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தள்ளுபடி செய்யாதது ஏன் என்று காங்கிரஸ் வினவியுள்ளது.
- ஊட்டி, கொடைக்கானல் செல்லும் சுற்றுலாப்பயணிகளுக்கு அடுத்த மாதம் 7-ஆம் தேதி முதல் இ-பாஸ் வழங்கும் நடைமுறையை அமல்படுத்த வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
- **Telavi Cader** கோப்பைக்கான ஜூடோ போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

<<<<<<<>>>>>

தமிழகத்தில் உள்ள வாக்கு எண்ணும் மையங்களில் கண்காணிப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருவதாக தேர்தல் ஆணையம் கூறியுள்ளது.

39 வாக்கு எண்ணும் மையங்களிலும் மூன்றடுக்கு பாதுகாப்பு போடப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையத்தின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு அறைகள் சிசிடிவி கேமராக்கள் மூலம் கண்காணிக்கப்படுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாவட்ட தேர்தல் அதிகாரிகள் நாள்தோறும் இதனை ஆய்வு செய்து வருவதாகவும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இன்று சென்னையில் வாக்கு எண்ணும் மையங்களை ஆய்வு செய்த மாநகராட்சி ஆணையரும், தேர்தல் அதிகாரியுமான திரு ராதாகிருஷ்ணன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

ஈரோடு மாவட்ட தேர்தல் அதிகாரி திரு ராஜகோபால் சுங்காரா, வாக்கு எண்ணும் மையத்தை காவல்துறை அதிகாரிகளுடன் இன்று ஆய்வு செய்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசினார்.

மதுரையில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள மருத்துவக்கல்லூரி வளாகத்தை சுற்றி இரண்டு கிலோமீட்டர் தொலைவிற்கு ட்ரோன் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் திருமதி சங்கீதா கூறியுள்ளார்.

இதற்கிடையே, வாக்குப்பதிவு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள அறைகளில் சி சி டி வி கேமராக்கள் முழுமையாக செயல்படுவதை உறுதி செய்ய வேண்டும் என திமுக, தேர்தல் ஆணையத்தை வலியுறுத்தியுள்ளது.

இன்று சென்னையில் தலைமை தேர்தல் அதிகாரி திரு சத்யபிரத சாஹூவை சந்தித்த திமுக குழுவினர் இதுதொடர்பான கோரிக்கை மனுவினை அளித்தனர்.

சில இடங்களில சிசிடிவி கேமராக்கள் செயலிழந்ததாகவும் அந்த மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

இதற்கிடையே, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் விவி பேட் ஒப்புகை சீட்டுகளை 100 சதவீதம் சரிபார்க்க உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவினை சென்னை உயர்நீதிமன்றம் தள்ளுபடி செய்துள்ளது.

தலைமை நீதிபதி திரு கங்கா பூர்வாலா, நீதிபதி திரு சத்யநாராயண பிரசாத் அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இதுதொடர்பான வழக்கை உச்சநீதிமன்றம் ஏற்கனவே தள்ளுபடி செய்துள்ளதை சுட்டிக்காட்டி, இந்த மனு தள்ளுபடி செய்யப்படுவதாக அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

நாட்டை புதிய உயரத்திற்கு கொண்டு செல்வதில் பிஜேபி உறுதியுடன் உள்ளதாக அக்கட்சியின் தலைவர் திரு ஜெ பி நட்டா கூறியுள்ளார்.

தெலங்கானாவில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

மத்தியில் வலுவான, நிலையான ஆட்சியை பிஜேபி-யால் மட்டுமே வழங்க முடியும் என்று அவர் தெரிவித்தார்.

எதிர்க்கட்சிகளின் ஒருங்கிணைந்த கூட்டணிக்கு மக்கள் நலனில் அக்கறை இல்லை என்றும் திரு நட்டா குற்றம் சாட்டினார்.

<<<<<<<>>>>>>

வேளாண் கடன்களை பிஜேபி தலைமையிலான மத்திய அரசு தள்ளுபடி செய்யாதது ஏன் என்று காங்கிரஸ் முன்னாள் தலைவர் திரு ராகுல்காந்தி கேள்வி எழுப்பியுள்ளார்.

குஜராத் மாநிலத்தில் இன்று தேர்தல் பிரச்சாரம் மேற்கொண்டு அவர் பேசினார்.

தொழில் அதிபர்களுக்கு ஆதரவாக பிஜேபி அரசு செயல்படுவதாகவும் திரு ராகுல்காந்தி குற்றம் சாட்டினார்.

<<<<<<<>>>>>>

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் அடுத்த ஐந்து தினங்களுக்கு அதிகரித்தே காணப்படும் என்று சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு செந்தாமரை கண்ணன் கூறியுள்ளார்.

எமது செய்தியாளரிடம் இதை தெரிவித்த அவர், வட தமிழகத்துக்கு உட்பட்ட ஒரு சில பகுதிகளில் அடுத்த மூன்று நாட்களுக்கு வெயிலின் தாக்கம் அதிகரிக்கக்கூடும் என்றார்.

இதற்கிடையே, மலைப்பிரதேசமான நீலகிரி மாவட்டத்தில் 73 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு வெப்பநிலை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<<<<>>>>>

ஊட்டி, கொடைக்கானல் செல்லும் சுற்றுலாப்பயணிகளுக்கு அடுத்த மாதம் 7-ஆம்தேதி முதல் இ-பாஸ் வழங்கும் நடைமுறையை அமல்படுத்த வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம், நீலகிரி, திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர்களுக்கு உத்தரவிட்டுள்ளது.

சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான வழக்கினை விசாரணை செய்த நீதிபதிகள் திரு சத்தீஷ்குமார், திரு பரதசக்ரவர்த்தி அமர்வு இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இதனை ஜூன் 30-ஆம் தேதிவரை அமல்படுத்த வேண்டும் என்றும் அந்த உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

உள்ளூர் மக்களுக்கு இதில் விலக்கு அளிக்க வேண்டும் என்றும் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

<<<<<<<>>>>>

*<u>மாவட்டச் செய்திகள்</u>*

தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் குரூப்-4 பணிகளுக்கான போட்டித்தேர்வு வரும் 9-ஆம் தேதி நடைபெறவுள்ள நிலையில் தருமபுரி மாவட்டத்தில் அதற்கான முன்னேற்பாடுகள் குறித்த ஆய்வுக்கூட்டம் ஆட்சியர் திருமதி சாந்தி தலைமையில் நடைபெற்றது.

-------------------

நாமக்கல் மாவட்டம் செங்கோடம்பாளையத்தில் உள்ள குப்பைக்கிடங்கில் ஏற்பட்ட தீயை அணைக்கும் பணியினை ஆட்சியர் திருமதி உமா ஆய்வு செய்தார்.

-------------------

சேலம் மாவட்டம் மேச்சேரி அருகே இன்று நேரிட்ட சாலை விபத்தில் இரண்டு பேர் உயிரிழந்தனர்.

-------------------

மாநகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் அமைந்துள்ள மூன்று வாக்கு எண்ணும் மையங்களில் காவல்துறை ஆணையர் திரு சந்தீப் ராய் ரத்தோர் இன்று ஆய்வு மேற்கொண்டார்.

<<<<<<<>>>>>

*<u>விளையாட்டுச் செய்திகள்</u>*

**Telavi Cader** கோப்பைக்கான ஜூடோ போட்டியில் இந்தியா ஒரு தங்கம், ஒரு வெள்ளிப்பதக்கம் வென்றது.

ஜார்ஜியாவில் நடைபெற்ற இப்போட்டியின் மகளிர் 70 கிலோ எடைப்பிரிவில் இந்தியாவின் **Dipapati Ngangbam** தங்கப்பதக்கத்தையும், 48 கிலோ எடைப்பிரிவில் **Oliviya Devi** வெள்ளிப்பதக்கத்தையும் வென்றனர்.

----------------

**Batch** ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் பட்டம் வென்றார்.

பாரிஸில் நடைபெற்ற இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதியாட்டததில் அவர் 11-6, 11-9, 11-6 என்ற செட் கணக்கில், பிரான்சின் **Melvil Scianimanico**-வை வென்றார்.

--------------

தாமஸ் கோப்பை பேட்மிண்டன் போட்டியில் இந்தியா காலிறுதிக்கு முன்னேறியுள்ளது.

சீனாவில் நடைபெற்றுவரும் இப்போட்டியின், இரண்டாவது லீக் ஆட்டத்தில் இந்தியா 5-0 என்ற ஆட்டக்கணக்கில் இங்கிலாந்தை வென்றது.

---------------

பாரிஸ் ஒலிம்பிக் பேட்மிண்டன் போட்டியின் ஒற்றையர் பிரிவில் பங்கேற்க இந்தியாவின் பிரணாய், லக்ஷயாசென், பி வி சிந்து ஆகியோர் தகுதி பெற்றுள்ளனர்.

ஆடவர் இரட்டையர் பிரிவில் சாத்விக் சாய்ராஜ் - சிராக் ஷெட்டி இணையும், மகளிர் இரட்டையர் பிரிவில் **Tanisha Crasto** – அஸ்வினி பொன்னப்பா இணையும் ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்க தகுதி பெற்றனர்.

-------------------

பாரிஸ் ஒலிம்பிக் தகுதிச்சுற்று துப்பாக்கிச்சுடும் போட்டியில் இந்தியாவின் **Maheshwari Chauhan** தங்கப்பதக்கம் வென்றார்.

----------

ஸ்பெயின் பாரா பேட்மிண்டன் போட்டியில் இந்தியா ஐந்து தங்கம், ஐந்து வெள்ளி, ஏழு வெண்கலப்பதக்கங்களை வென்றது.

-------------

உலகக்கோப்பை பாரா துப்பாக்கிச்சுடும் போட்டியில், இந்தியா 2 தங்கம், 2 வெள்ளி, ஒரு வெண்கலப்பதக்கம் வென்றது.

----

ஐ பி எல் கிரிக்கெட் போட்டியில், கொல்கத்தா இன்று தில்லி அணியை எதிர்கொள்கிறது.

**<<<<<<END>>>>**